**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை**

**திருவாரூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை**

**(17.06.2023 முதல் 21.06.2023)**

**அறிக்கைஎண்: 48/2023** **தேதி: 16.06.2023**

**திருவாரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை**

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 – 29 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**திருவாரூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.06.2023 முதல் 21.06.2023).**

| கடந்தவாரவானிலை (13.06.2023 முதல் 15.06.2023) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (17.06.2023 முதல் 21.06.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/06 | நாள்-2 14/06 | நாள்-3 15/06 | தேதி | நாள்-1 17/06 | நாள்-2 18/06 | நாள்-3 19/06 | நாள்-4 20/06 | நாள்-5 21/06 |
| 6.5 | 0 | 0 | மழை (மி.மீ.) | 5 | 8 | 32 | 4 | 7 |
| 38 | 38 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 40 | 39 | 38 | 38 | 38 |
| 28 | 29 | 29 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 29 | 28 | 28 | 27 | 27 |
| 6 | 5 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 8 | 8 | 6 | 6 |
| 73-61 | 69-58 | 64-56 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-30 | 70-30 | 90-60 | 80-60 | 70-50 |
| 6 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 12 | 16 | 8 | 10 |
| தென் மேற்கு | தென் தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | காற்றின் திசை | மேற்கு தென் மேற்கு | தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு |

**திருவாரூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

வரும் நாட்களில் வானம் பெருபாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 17.06.2023 முதல் 21.06.2023 ஆகிய தினங்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 38 – 40 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 29 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 - 90 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 30 - 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8 - 16 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் மேற்கு தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மருந்து தெளிப்பதை தள்ளிப்போடவும். |
| நெல் | நடவு வயல் | மழை நின்ற பின் பயிர் நடவு செய்த 3 முதல் 5 நாட்களுக்குள் களை முளைப்பதற்கு முன் களைக்கொல்லிகளான பூட்டாகுளோர் 50 இ.சி 1.0 லிட்டர் (அ) அனிலோபாஸ் 30 இ.சி 500 மி லி (1 ஏக்கர்) இவைகளில் ஏதாவது ஒன்றை 20 கிலோ மணலுடன் கலந்து சீராக தூவ வேண்டும். |
| நெல் | நடவு வயல் | தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லதுபெனாஜாகுயின் 10 இ.சி 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| பருத்தி | வளர்ச்சி பருவம் | தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் மாவு பூச்சியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த மழை நின்ற பின் டைமித்தோயட் 30 EC அல்லது புரோப்பனோபாஸ் 2 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். வேப்பெண்ணை 2 சதம் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் என்ற அளவில் தேவையான அளவு ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும் |
| வாழை | | வாழை மரங்கள் காற்று மற்றும் மழையால் சாயாமல் இருக்க, வாழை மரங்களுக்கு முட்டுக்கொடுத்து பாதுகாக்கவும். |
| கால்நடைகளுக்கு | மாடு | பருவ மழை தொடங்குவதற்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும் |

## குறுஞ்செய்தி

தற்போது நிலவக் கூடிய வானிலையின் காரணமாக பருத்தியில் மாவு பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைமித்தோயட் 30 EC அல்லது புரோப்பனோபாஸ் 2 மி.லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

**இயக்குநர்**